ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2088/47 - 2018 සැප්තැම්බර් මස 12 වැනි බදාදා - 2018.09.12
2088/47 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மத்திய மாகாண மாகாண சபை

*மத்திய மாகாண மாகாண சபையின் 2018 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கம் கொண்ட உள்ளூராட்சி வள நிலைய நியதி வரைவுச் சட்டம்*

மத்திய மாகாண மாகாண சபைக்குள் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள மேற்குறித்த நியதிச் சட்டத்தின் வரைவைப் பொதுமக்களது கருத்துக்களைக் கோருவதற்கெனக் கீழே வெளியிடுகின்றேன். இந்த அறிவித்தல் வெளியிடப்பட்ட 10 நாட்கள் கழிந்த பின்னர் இந்த நியதிச் சட்டம் மத்திய மாகாண சபையில் முன்வைக்கப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இந்த நியதிச் சட்டத்தில் உள்ளடங்கியுள்ள அம்சங்கள் பற்றிய ஏதும் கருத்துக்கள் அல்லது முன்மொழிவுகளை முன்வைக்க உத்தேசிப்பதாயின், இந்த அறிவித்தலின் 10 நாட்களுக்குள் குறித்த கருத்துக்களை அல்லது முன்மொழிவுகளை எழுத்துமூலம் பின்வரும் முகவரியில் எனக்குத் தெரிவித்தல் வேண்டும்.

சரத் ஏக்கநாயக்க,
மத்திய மாகாணத்தின் முதலமைச்சு மற்றும் நிதி மற்றும் திட்டமிடல்,
நீதி, சமாதானம், உள்நாட்டு அலுவல்கள் மற்றும் மாகாண நிர்வாகம்,
மனிதவலு, கல்வி, கலாசார நடவடிக்கைகள், சுற்றுலாத்துறை, காணி,
கூட்டுறவு அபிவிருத்தி, வர்த்தக, வாணிப, உணவு வழங்கல் மற்றும்
விநியோகம், முதலீட்டு ஒருங்கமைப்பு அமைச்சு.

மத்திய மாகாண முதலமைச்சு மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
மாகாண சபைக் கட்டடத் தொகுதி,
பள்ளேகல,
குண்டசாலை.

1A - PG4221 - 107 (2018/09)
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## மத்திய மாகாண மாகாண சபை

*மத்திய மாகாண சபை 2018 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க உள்ளூராட்சி வள நிலையத்தின் நியதிச் சட்டம்*

விவரணம் — *மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி அமையங்களது தகவுத்திறனையும் விளைதிறனையும் உயர்த்துவதற்கும், அவற்றின் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பணியாட் குழுவினரையும் இலக்காகக் கொண்டு மனித வளங்களை அபிவிருத்தி செய்வதற்கென உள்ளூராட்சி அமையங்களுக்குத் தேவையான தகவல் தொழில்நுட்ப அறிவைப் பெறுவது மற்றும் அவற்றுடன் தொடர்பானநடவடிக்கைகளை ஒன்றிணைப்புச் செய்து அவற்றை வழிநடத்துவது மற்றும், ஏனைய அரசு மற்றும் தனியார் அமையங்களது மனிதவள அபிவிருத்திக்கும் என மத்திய மாகணத்தின் உள்ளூராட்சி வள நிலையத்தைத் தாபிப்பதுடன் அதனுடன் தொடர்பான அல்லது அதனுடன் இடைநேர் விளைவான ஏற்பாடுகளைச் செய்வதற்குமான நியதிச் சட்டம் இதுவாகும்.*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாண சபையினால் இவ்வாறு விதிக்கப்படுகின்றது.**

சுருக்கப் பெயரும் செயற்படும் தினமும்.

1. *இந்த நியதிச் சட்டம் மத்திய மாகாண மாகாண சபையின் 2018 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கம் கொண்ட மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி வள நிலையத்தை தாபித்தல் பற்றிய நியதிச்சட்டம் என அறிமுகம் செய்யப்படுவதுடன், மத்திய மாகாணத்தின் ஆளுநரது அங்கீகாரம் கிடைக்கப் பெற்ற திகதி முதல் இது நடைமுறைக்கு வரும்.*

### பிரிவு - I

### உள்ளூராட்சி வளநிலையத்தைத் தாபித்தல்

2. *இந்த நியதிச்சட்டத்தில் குறித்துரைக்கப்படும் நோக்கங்களைச் செயற்படுத்தும் கருமங்களுக்கென " உள்ளூராட்சி வளநிலையம்" என்ற ( இங்கு இதன் பின்னர் நிலையம் என அறிமுகம் செய்யப்படும்) ஒரு நிலையம் மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சித் திணைக்களத்தின் கீழ் அமைக்கப்படும்.*

3. *இங்கு இதன் பின்னர் பணிப்பாளராக அறிமுகம் செய்யப்படுபவர், இந்த நிலையத்தின் முதல்வராக விடயப் பொறுப்பு அமைச்சரது பரிந்துரையுடன் ஆளுநரால் நியமிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அவர் திணைக்களம் அங்கீகரித்த பணியாட் குழுவின் நிறைவேற்றுத் தரத்திலான ஒரு அலுவலராகவும் இருத்தல் வேண்டும்.*

4. *நிலையத்தின் குறிக்கோள்களைச் செயற்படுத்தும் கருமங்களுக்கெனத் தேவைப்படும் பணியாட் குழுவைத் திணைக்களத்துக்கென அங்கீகரிக்கப்பட்ட பணியாட்குழு ஆணையாளரால் இணைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.*

5. *நிலையத்தின் குறிக்கோள்கள் பின்வருமாறு அமைதல் வேண்டும்:*

நிலையத்தின் குறிக்கோள்கள்.

I. *மத்திய மாகணத்துக்குள் செயற்படும் உள்ளூராட்சி அமையங்களது மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அமையங்களது பணியாட்குழுக்களை அறிவு, திறன் மற்றும் பனப்பாங்குகளால் நிறைவு பெற்ற பிரிவினராக ஆக்கி உள்ளூராட்சி அமையங்களை வினைத்திறன் மிக்க, பன்பளவான பொது மக்கள் சேவைகளை வழங்கும் அமையவங்களாக ஆக்குவது.*

II. *உள்ளூராட்சியைப் பற்றி மாகாணத்தின் மக்கள் மன்றங்கள் மற்றும் பொதுமக்கள் நேரடியாக பங்கேற்புச் செய்வதற்கென அறிவூட்டம் செய்யப்படுவதுடன் அவர்களை வலுவூட்டும் வேலைத்திட்டங்களைச் செயற்படுத்துவது.*

III. *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் ஏற்பாடுகளுக்கமைய மாகாணத்தின் உளளூராட்சித் துறையின் உயர்வுக்கென அரச தாபனங்கள், மாகாண சபை, தேசிய மற்றும் வெளிநாட்டு அரசுகள், உண்ணாட்டு மற்றும் வெளிநாட்டு அரச சார்பற்ற தாபனங்கள், அமையங்கள் மற்றும் தனியார் துறை, தனியாட்கள் மற்றும் உள்ளூராட்சி அமையங்களது நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளைப் பெறுவது, மற்றும் ஒன்றிணைப்புச் செய்வதன் மூலம் உள்ளூராட்சி அமையங்களது கொள்ளளவை அபிவிருத்தி செய்வது.*

IV. உள்ளூராட்சி அமையங்கள் மட்டத்தில், மாகாண மட்டத்தில், தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் அறிவைப் பகிர்ந்து கொள்ளும் நிலையமாகச் செயற்படுவது.

V. வெளிவாரி அமையங்களது மனிதவள அபிவிருத்தி தொடர்பில் பெறப்படும் வேண்டுகோள்க ளுக்கென வசதிகளை வழங்குவது.

6. நிலையத்தின் அதிகாரங்கள் பின்வருமாறு அமையும்:- நிலையத்தின் அதிகாரங்களும் கடமைக் கூறுகளும்.

I. உள்ளூராட்சி வள நிலையத்தின் பணியாட் குழுவினரை நிருவகித்தல்
II. உள்ளூராட்சி வள நிலையத்தை முறையாகப் பேணி வருதல்
III. உள்ளூராட்சி வள நிலையத்தின் கணக்கு அறிக்கைகளை முன்வைத்தல்
IV. உள்ளூராட்சி அமையத்துக்கு எனச் சொத்துக்களைக் கையேற்பு செய்தலும் சொத்துரிமையை ஆக்ககுவதும்
V. உள்ளூராட்சி வள நிலையத்தின் நடவடிக்கைகளுடன் தொடர்பான வெளியார் தரப்பினருடன் ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளல்

7. நிலையத்தின் கடமைக் கூறுகள் பின்வருமாறு அமையும்:-

I. மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சித் திணைக்களம் மற்றும் உதவி ஆணையாளர் அலுவலகம் அத்துடன் உள்ளூராட்சி அமையங்களைத் தகவற் தொழில்நுட்பத்தை உச்ச அளவில் பயன்படுத்தும் அமையங்களாக ஆக்குவதற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவையும் பயிற்சியையும் வழங்குவது.

II. உள்ளூராட்சித் துறையின் வளர்ச்சிக்கெனப் பல்வேறு பாடநெறிகளை ஒழுங்கு செய்வதும் நடத்துவதும்

III. முகாமைத்துவ சபையினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களைச் செயற்படுத்துவதும் தகவல்களை வழங்குவதும்

IV. முகாமைத்துவக் குழு மற்றும் ஆலோசனைக் குழுவுக்கிடையில் ஒன்றிணைப்பை ஏற்படுத்துவது,

V. பயிற்சித் திட்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதன் மூலம் வருமான ஈட்டம் பெறுவது,

VI. வள நிலையத்தில் பதிவு பெறுவதற்கெனப் பயனாளிகளிடமிருந்து கட்டணங்களை அறவிடுவது.

8. நிலையத்தின் கருமங்களைக் கட்டுப்படுத்துவது, வழிநடத்துவது மற்றும் மேற்பார்வைக்கென (இங்கு இதன் பின்னர் "செயற்குழு" என அழைக்கப்படும்) முகாமைத்துவ செயற்குழு தாபிக்கப்படுதல் வேண்டும் முகாமைத்துவச் செயற்குழு.

I. முகாமைத்துவ செயற்குழு பின்வரும் பதவிவழி நியமனம்பெறும் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டதாக அமைதல் வேண்டும்:-

(அ) விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளர் அல்லது அவரால் பெயரிடப்படும் அலுவலர்

(ஆ) ஆணையாளர்

(இ) கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களின் உதவி ஆணையாளர்கள்

(ஈ) உள்ளூராட்சி உதவி ஆணையாளர் (திணைக்களத்தின்)

(உ) பணிப்பாளர்

(ஊ) நிலையத்தின் பொறுப்புக்கள் சாட்டப்பட்டுள்ள இன்னுமொரு அலுவலர்.

9. அமைச்சின் செயலாளர் கமிட்டியின் தலைவராக இருப்பதுடன், செயலாளர் பெயரிடும் அலுவலர் இருப்பின் ஆணையாளர் கமிட்டியின் தலைவராக இருத்தல் வேண்டும். பணிப்பாளர் கமிட்டியின் செயலாளராக இருத்தல் வேண்டும். முகாமைத்துவச் செயற்குழுவின் தலைவர் மற்றும் செயலாளர்.

முகாமைத்துவச் செயற்குழுவின் அதிகாரங்களும் கடமைக் கூறுகளும்.

10. முகாமைத்துவ செயற்குழுவின் அதிகாரங்களும் கடமைக் கூறுகளும் பின்வருமாறு அமைதல் வேண்டும்:-

I. நிலையத்தைத் தாபிக்கும் குறிக்கோள்களை எய்துவதற்கெனத் தேவையான திட்டங்களைத் தயாரிப்பது, செயற்படுத்துவது, முன்னேற்ற மீளாய்வு செய்வது, மதிப்பீடு செய்வதற்குத் தேவையான அனைத்து பரிபாலனத்தையும் தீர்மானிப்பது.

II. நிலையத்தின் அபிவிருத்திக்கெனத் தேவையான அனைத்து வழிமுறைகளையும் மேற்கொள்வது.

III. நிலையத்தின் கருமங்களை நிறைவேற்றிக்கொள்ளத் தேவையான நிதியை ஈடுபடுத்தும் வழிமுறைகளைத் தீர்மானிப்பது.

IV. தேவை எனக் கருதும் சந்தர்ப்பங்களின்போது ஆலோசனைக் கமிட்டியின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வது மற்றும் பொருத்தமான வகையில் அவற்றை நடைமுறைப்படுத்துவது.

11. குறைந்தபட்சம் இரு மாதங்களுக்கு ஒருதடவை செயற்குழு கூட்டப்படுதல் வேண்டும்.

செயற்குழுவின் கோரம்.

12. கூட்டத்தின் "கோரம்" எனப்படுவது முகாமைத்துவ சபை உறுப்பினர்களுள் நால்வராக அமைதல் வேண்டும்.

ஆலோசனைச் செயற்குழு.

13. I. முகாமைத்துவ செயற்குழுவின் கருமங்களை நடாத்திச் செல்வதற்கெனத் தேவையான ஆலோசனைகள் வழிகாட்டல்களை வழங்குவதற்கென இங்கு இதன் பின்னர் ஆலோசனைச் செயற்குழு என அழைக்கப்படும் இச்செயற்குழுவின் உறுப்பினர்கள் பின்வருமாறு அமைதல் வேண்டும்.

பதவிவழியில் நியமிக்கப்படும்

(அ) மத்திய மாகாணத்தின் பிரதம செயலாளர் அல்லது அவரால் பெயரிடப்படும் ஒரு அலுவலர்

(ஆ) மத்திய மாகாண முதலமைச்சின் செயலாளர்

(இ) உள்ளூராட்சி ஆணையாளர்
முதலமைச்சரால் நியமனம் செய்யப்படும்

(ஈ) மாநகர சபையொன்றின் நகரபிதா ஒருவர்

(உ) நகர சபை ஒன்றின் தலைவர் ஒருவர்

(ஊ) மத்திய மாகாணத்தின் பிரதேச சபைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தவிசாளர்கள் இருவர்

II. பிரதம செயலாளர் ஆலோசனைச் செயற்குழுவின் தலைவராக இருத்தல் வேண்டும் என்பதுடன், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் செயற்குழுவின் செயலாளராகவும் இருத்தல் வேண்டும்.

III. செயற்குழுவின் பதவிக்காலம் மூன்று வருடங்களாகும்.

IV. செயற்குழுவின் உறுப்புரிமை முடிவுக்குவரும் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு அமையும்:-

(அ) ஆலோசனைச் செயற்குழு உறுப்பினரது இறப்பு, பதவியிலிருந்து கேட்டு விலகுதல், ஆலோசனைச் செயற்குழு உறுப்புரிமை முடிவுறுதல்

(ஆ) விடயப் பொறுப்பு அமைச்சரால் நியமிக்கப்படும் ஆலோசனைச் செயற்குழுவில் உறுப்புரிமை பெறுபவர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அமைச்சர் எழுத்துமூலம் காரணத்தைக் குறிப்பிட்டு நீக்கப்பட முடியும்.

(இ) நீக்கப்பட்ட பின்னர் நியமனம் பெறும் பதிலீட்டு உறுப்பினர் எஞ்சியுள்ள காலத்துக்குப் பதவி வகிக்க முடியும்.

V. உள்ளூராட்சி அமையங்கள் கலைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களின்போது உள்ளூராட்சி அமையத்தின் கடமைகளைச் சாட்டுதல் செய்யப்பட்டுள்ள அலுவலர் ஆலோசனைக்ட கமிட்டியில் நியமிக்கப்படுவது சட்டபூர்வமாக அமையும்.

14. செயற்குழுவொன்றின் உறுப்பினர்களுக்கு ஆளுநரது அங்கீகாரத்துடன் முதலமைச்சரால் விதிக்கப்படும் ஏதும் கொடுப்பனவொன்று வழங்கப்பட முடியும். கொடுப்பனவு வழங்குதல்.

## பகுதி - II

## உள்ளூராட்சி வள நிலையத்தின் நிதி மற்றும் கணக்கு நடவடிக்கைகள்

15. (I) நிலையத்துக்கென மாகாணத் திறைசேரியின் விதிப்புக்கமையத் தனியான கணக்கொன்ற பேணப்படுதல் வேண்டும் என்பதுடன், கீழே குறிப்பிடப்படும் பெறுகைகள் உரிய கணக்கில் வரவில் இடப்படுதலும் வேண்டும். நிதி நடவடிக்கைகள்.

அ. நிலையத்துக்கென மாகாண சபை இடைக்கிடை வழங்கும் நிதி
ஆ. நியதிச் சட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கென அரச மற்றும் அரச சார்பற்ற தாபனங்களிலிருந்து கிடைக்கப்பெறும் நிதி
இ. உள்ளூராட்சி அமையங்கள் மூலம் கிடைக்கப்பெறும் பங்களிப்பு நிதி
ஈ. நிலையம் தனது கருமங்களை நிறைவேற்றுவதன் மூலம் திரட்டிக்கொள்ளும் அல்லது அறவிட்டுக் கொள்ளும் நிதி
உ. நிலையத்துக்குக் கிடைக்கும் ஏனைய உதவிகளும் வழங்கல்களும் ஏனைய உதவிகளும் வழங்கல்களும்.

(II) கருமங்களை நிறைவேற்றிக்கொள்ளத் தேவைப்படும் தொகை நிதி முகாமைத்துவ செயற்குழு தீர்மானிக்கும் வகையில் ஈடுபடுத்தப்படுதல் வேண்டும்.

(III) ஒவ்வொரு ஆண்டினதும் சனவரி மாதம் முதலாம் திகதி முதல் அந்த ஆண்டின் திசம்பர் மாதம் முப்பத்தோராம் திகதி வரை நிலையத்தின் நிதியாண்டு அமைதல் வேண்டும். நிதியாண்டு.

(IV) ஒவ்வொரு நிதியாண்டுக்குமென அந்தந்த நிதியாண்டின் வருமானங்கள் செலவினங்கள் மற்றும் ஏனைய அனைத்து கொடுக்கல் வாங்கல்கள் உள்ளிட்ட வருடாந்த இறுதிக் கணக்குக் கூற்றுகள் தயாரிக்கப்படுதல் வேண்டும். முன்னைய வருடத்தின் கணக்கு அறிக்கைகள் ஒவ்வொரு வருடத்தின்தும் மார்ச்சு மாதம் முப்பத்தோராம் திகதிக்கு முன்னர் அமைச்சரால் மாகாண சபையில் முன்வைக்கப்படுதல் வேண்டும். கணக்குக் கூற்றுகள்.

16. நிலையத்தின் நடவடிக்கைகள் மற்றும் அதன் கணக்குகள் என்பன கணக்காய்வாளரால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும். கணக்காய்வு.

17. நிலையம் இலஞ்ச ஊழல் சட்டத்தின் கீழான வகையில் பட்டியலிடப்பட்ட அமையமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமையச் செயற்படுதலும் வேண்டும். இலஞ்ச ஊழல் சட்டத்தின் கீழான வகையில் பட்டியலிடப்பட்ட அமைய மொன்றாக அமைதல்.

## பொதுவான ஏற்பாடுகள்

18. (I) நிலையத்தின் நோக்கங்கள் மற்றும் முகாமைத்துவ செயற்குழுவின் அதிகாரங்கள் மற்றும் கடமைக்கூறுகளை நிறைவேற்றிக்கொள்ளத் தேவையான அம்சங்கள் தொடர்பாக விதிகளை அமைக்கும் அதிகாரம் அமைச்சருக்கு உண்டு. அமைச்சர் விதிகளை அமைத்தல்.

(II) அமைச்சரால் அமைக்கப்படும் ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும். வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒருமாத காலத்துக்குள் அது மாகாண சபையில் முன்வைக்கப்படுதல் வேண்டும்.

(III) மாகாண சபையில் நிறைவேற்றப்படாத ஏதும் விதிகள் அங்கீகரிக்கப்பட்ட குறித்த திகதியிலிருந்து குறித்த விதிகளது முன்னைய நடைமுறைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் செயலற்றதாக ஆக்கப்பட்டதென்ற திகதி பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

குற்றமும் தண்டனையும்.

19. இந்த நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது அவற்றின் கீழ் ஆக்கப்பட்ட சட்ட விதிகள், கட்டளைகள் அல்லது ஏற்பாடுகளை மீறுவது மற்றும் குறித்த ஏற்பாடுகளுக்கமையச் செயற்படும் அதிகாரம் கொண்டுள்ளவரை அவரது கடமையைச் செய்வதற்குத் தடையாக இருத்தல் இந்த நியதிச் சட்டத்தின் கீழ் குற்றமொன்றாக அமையும். நீதிபதியொருவர் முன்னிலையில் நடத்தப்படும் வழக்கொன்றின் விசாரணையின் பின்னர் குற்றவாளியாக்கப்படின், பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்படாத தண்டத்துக்கும் அல்லது ஆறு மாத சிறைத்தண்டனைக்கும் என இரண்டு முறைகளில் ஒரு முறையின்கீழ் சிறைத்தண்டனைக்கே அல்லது தண்டத்துக்கோ அல்லது இரண்டுக்குமோ உட்படுதல் வேண்டும்.

20. இந்த நியதிச் சட்டத்தின் சிங்களம் மற்றும் தமிழ் அல்லது ஆங்கில வாசகங்களிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படுமெனின், அவற்றின் சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

சொற்பத விளக்கம்.

21. சொற்பத விளக்கங்கள் தேவைப்பட்டாலன்றி இந்த நியதிச் சட்டத்தில்

மாகாண சபை என்பது மத்திய மாகாண சபையையும்,

ஆளுநர் என்பது மத்திய மாகாணத்தின் ஆளுநர் அவர்களையும்,

அமைச்சர் என்பது மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சிவிடயப் பொறுப்பு அமைச்சரையும்,

அமைச்சின் செயலாளர் என்பது மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளரையும்,

ஆணையாளர் என்பது மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி ஆணையாளரையும்,

திணைக்களம் என்பது மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சித் திணைக்களத்தையும்,

ஆலோசனைச் செயற்குழு என்பது வள நிலையத்தின் ஆலோசனைச் செயற்குழுவையும் குறிக்கும்.

09 - 756

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.